RECEIVED 24 ... 1990 Periodicals Division Library

யாழ். நகரில் **இரவிலும் 'பொம்மர்' குண்டுவீச்சு! வீடுகள் தரைமட்டம்!!**


விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 ஆடி: 8 துல் ஹஃதா: பிறை: 30 இதழ்: 155

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24-07-1990


## பிலிப் மருத்துவமனை முற்றாக சேதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நேற்று முன் தினம் இரவு 'அவ்ரோ' விமானங்கள் குண்டுவீசியதால் பிரதான வீதியிலுள்ள டாக்டர் பிலிப் தனியார் மருத்துவமனை முற்றாக சேதமடைந்தது! மற்றும் சில வீடுகளும் கடைகளும் சேதமடைந்தன.

யாழ். நகர் மீது நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் பொம்மர் விமானமும், ''அவ்ரோ விமானங்களும்'' குண்டுகளைப்போட்டு, பெரும் சேதங்களை ஏற்படுத்தின.

இவ்வளவு நாட்களும் குண்டுகளைப் போட்ட விமானங்கள் நேற்றுமுன்தினம் முதல் இரவு

(4-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் ஊரடங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில், நேற்று அதிகாலை முதல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி அறிவித்துள்ளார்.

இவ் ஊரடங்கு உத்தரவை மீறுவோர், பயங்கரவாதிகளாகக் கருதப்பட்டு, சுட்டுக் கொல்லப் படுவார்கள் என்று கடும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# "யாழ். மக்களை ராணுவரீதியில் வெற்றிகொள்ளவே முடியாது!"

## புதுடில்லியில் அநுரா கருத்து

### "இனப்பிரச்சனையைத் தீர்த்துவைக்க இந்தியா முயற்சிக்க வேண்டும்"

(புதுடில்லி)

**"யாழ்ப்பாண மக்களின் ஆதரவு விடுதலைப்புலிகளுக்கு இருப்பதினால் அவர்களை, இராணுவ ரீதியில் கட்டுப்படுத்துவது கடினமாகவே இருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து இந்தியத் தலைவர்களுக்கு எடுத்துரைப்பதற்காக இலங்கை பாராளுமன்றக்குழுவின் பிரதிநிதியாகச் சென்ற திரு. அநுரா பண்டாரநாயக்கா நேற்று முன்தினம் புதுடில்லியில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகியிலேயே மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார்,

இலங்கை இனப் பிரச்சனைக்கு தீர்வுகாண இந்தியா முயற்சி மேற்கொண்டால், சாதகமானமுடிவுகிடைக்கும்என்றும் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி பிரேமதாசா சர்வதேச தலையீட்டைக் கோரியிருப்பதை தாம் ஆதரிக்கவில்லை என்றும் திரு. அநுரா பண்டாரநாயக்கா கூறினர்.

''இந்தியா விடுதலைப் புலிகளை வழிக்குக் கொண்டுவரத் தமது செல்வாக்கைப் பயன்படுத்தவேண்டும். இதற்கு எங்களுடைய முழுமையான ஆதரவுமுண்டு,'' என்று தெரிவித்த அவர்;

(4-ம் பக்கம் பார்க்க)

## தகவல் மையம்: அகதிகளுக்காக 24 மணி நேரமும் சேவை

(யாழ்ப்பாணம்)

திருமலை வவுனியா பகுதிகளிலிருந்து தினமும் இரவு பகலாக அகதிகள் யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

முத்திரைச்சந்தையிலுள்ள யாழ். இந்துக்கல்லூரி சென் ஜோன் அம்புலன்ஸ் படைபிரிவினர் அகதிகளை வரவேற்று அவர்கள் செல்ல வேண்டிய இடங்களுக்கு அனுப்பி வைக்கின்றார்கள்.

இந்தப்படைப் பிரிவினரின் அகதிகளுக்கானதகவல்மையம் 24 மணி நேரமும் செயல்படுகிறது.

நேற்று முன்தினம் அதிகாலை இரண்டரை மணிக்கு சாம்

(4-ம் பக்கம் பார்க்க)

## படையினர் எண்மர் கடும் சமரில் பலி!

(யாழ்ப்பாணம்)

தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து, வெளியேற முற்பட்ட இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் முருங்கனில் இடைமறித்து மேற்கொண்ட கடும் தாக்குதலில் 8 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். 20துக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் 20 ரக் வண்டிகள் மூலம் வெளியேறிய இராணுவத்தினனரை விடுதலைப்புலிகள் முருங்கனில் இடைமறித்து கடும் தாக்கு

[4-ம் பக்கம் பார்க்க]

## விடுதலைப்புலிகள்-அரசபடை மோதல்: ஒரு மாதத்தில் 2745 பேர் பலி

(கொழும்பு)

கடந்த ஜூன்மாதம் முதல் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிகழ்ந்துவரும் விடுதலைப் புலிகள் அரசபடை மோதல்களில் இதுவரையில் பொலிஸார், அரச படையினர், போராளிகள் உட்பட 2745 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அரச-பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இவர்களைத்தவிர அப்பாவி

[4-ம் பக்கம் பார்க்க]

## முத்திரைச் சந்தையிலிருந்து கொழும்பு செல்லும் பயணிகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். முத்திரைச்சந்தை மினிபஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் மாலை கொழும்பு செல்லும் பயணிகள் பெருமளவில் காணப்பட்டனர்.

நூற்றுக்கு மேற்பட்ட கொழும்பு பயணிகள் 4 மினி பஸ்ஸில் புறப்பட்டனர்.

வவுனியாவிற்கு 2 பஸ்களும் மதவாச்சிக்கு 2 பஸ்களும் புறப்பட்டன. இந்த பஸ்களிலே கொழும்பு பயணிகள் சென்றனர் பயணிகளில்பெண்கள், வயோதிபர்கள், சிறுவர்களும் காணப்பட்டனர்.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா செல்லும் பயணிகளுக்கும், புறம்பாக மினிபஸ்கள் காணப்பட்டன.

கிளிநொச்சியில் நேற்று முதல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதால் இப்பாதை வழியான பஸ் போக்குவரத்து தடைப்பட்டது.

## ரஞ்சன் கொடும்பாவி இளவாலையில் எரிப்பு!

(பண்டத்தரிப்பு)

இளவாலைப்பகுதி மக்களினால் அமைச்சர் ரஞ்சன் விஜயவர்த்தனவின் கொடும்பாவி பறைமேளங்கள் ஒலிக்க ஒப்பாரி வைத்தபடி ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இளவாலைச் சந்தியிலிருந்து புறப்பட்ட இந்த மரண ஊர்வலத்தில் பெரும் தொகையான மக்கள் கலந்து கொண்டனர்.

கொடும்பாவியின் மீது ''தமிழ் மக்களை இனப்படுகொலை செய்து இன்னல்கள் விளைவிக்கும் அமைச்சர் விஜயவர்த்தனவுக்கு மரண தண்டனை'' என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது.

இந்த ஊர்வலம் இளவாலை சந்தியிலிருந்து புறப்பட்டு பெரியவிளான் ஊடாக சிறுவிளான் ஊடாக பண்டத்தரிப்பு சந்தியை வந்தடைந்து பின்பு பிரான்பற்று, பத்திமா வீதி, ஊடாக சிறுவிளான், முள்ளானை ஆகிய இடங்

(4-ம் பக்கம் பார்க்க)

## பரந்தன்-முல்லைத்தீவுவீதியில் சண்டை தொடருகிறது

(யாழ்ப்பாணம்)

பரந்தன், முல்லைத்தீவு வீதியில் ஆனையிறவு இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் கடும் சண்டை [illegible]ன்றது. நேற்றுமுன்தினம் ஆரம்பமான மேற்படி சண்டையில் இராணுவத்தினருக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக

(4ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில் 'பொம்மர்' தாக்குதல்:
# நீதிமன்றம், வித்தியாலயம், கருணைநிலையம் பலத்தசேதம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் சீ-பிளேன் வட்டமிட்டு வேவு பார்த்ததையடுத்து பொம்பர் விமானத் தாக்குதல் நடைபெற்றது: நகரில் பரவிப்பாஞ்சானிலும் பல வீடுகள் பொம்பர் தாக்குதலால் இடிந்து போயுள்ளது. ஸ்ரேசன் வீதியில் கடைகள் சேதமாகியுள்ளன: இதுதவிர நீதிமன்றம், கருணைநிலையம். கனிஷ்டமகா வித்தியாலம் முதலானவையும் பலத்த சேதத்தை தழுவியுள்ளது- பரந்தனிலும் சில கட்டிடங்கள் சேதமாகியுள்ளன. கணேசபுரத்தில் ஷெல் தாக்குதலுக்கு திருமதி சண்முகராசா காயமடைந்தார். இங்கு சில வீடுகள் சேதமடைந்தன. (83)

## அரச படைகளின் தாக்குதல்களைக் கண்டித்து
### அன்னையர் முன்னணி தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா இனவாத அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் தமிழ்பேசும் மக்கள் மீதான பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் பற்றியும் அதன் விளைவாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நெருக்கடியான சூழ்நிலைபற்றியுமான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினரால் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடத்தப்பட்டது.

அன்னையர் முன்னணியின் தலைவி திருமதி சரஸ்வதி கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அம்பாறை மாவட்டத்திலும் ஏனைய கிழகுப் பகுதிகளிலும் சிங்கள ராணுவம் மேற்கொண்டுவரும் மனிதாபிமானமற்ற கண்மூடித்தனமான தாக்குதல்களையும். இனப்படுகொலைகளையும் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் தமிழீழ மக்களுக்கெதிரான அரச பயங்கரவாத நடவடிக்கைகள்யாவும் உலக நாடுகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் ஆராயப்பட்டது.

## யாழ். நகரில்
# கடைகள் தினமும் இடம்மாறுகின்றன!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியகடை நவீன மார்க்கட் பகுதிகளில் 100க்கு மேற்பட்ட கடைகள் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களினுல் சேதமடைந்ததைத் தொடர்ந்து பொருள்கள் அப்புறப்படுத்தப்பட்டன.

ஷெல் தாக்குதல், விமானத் தாக்குதல் தொடர்வதால் சேதமடையாத கடைகளில் இருந்தும் தினம்தினம் பொருள்கள் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

தற்போது அநேகமான கடைகள். பொருள்கள எதுவுமின்றி வெறும் கட்டங்களாகவே காணப்படுகின்றன.

இப்பகுதியில் இருந்த கடைகள், நல்லூர், மானிப்பாய், கொக்குவில், கோண்டாவில் பகுதிகளுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன:

பிரதான வீதி, பஸ் நிலையம், ஆஸ்பத்திரி வீதி, மணிக்கூட்டு வீதி, ஸ்ரான்லி வீதி, கே. கே. எஸ். வீதி, கஸ்தூரியார் வீதி, மின்சார நிலைய வீதிக் கடைகளும் இடமாற்றப்பட்டுள்ளன.

## முத்திரைச்சந்தையில் கடைகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

முத்திரைச்சந்தை கடைகள் நிரந்தரமாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 11ம் திகதி யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து இங்கு தற்காலிகமாக சில கடைகள் போடப்பட்டன, பின்னர் மினி பஸ் சேவைகள் யாவும் இங்கிருந்து ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடைகள் அதிகரித்தன. ஒழுங்குமுறையின்றி கடைகள் அங்குமிங்குமாக அமைக்கப்பட்டிருந்தது

நேற்றுமுன்தினம் வரிசையாக கடைகள் அமைக்கவும், மினி பஸ்கள் வேறு இடத்தில் தரிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரியகடை, சின்னக்கடை மூடப்பட்டதை தொடர்ந்து முத்திரைச்சந்தையில் கடைகள் அதிகரித்து வருகிறது.

## சாவகச்சேரியில்
# பனம்வெல்லம்வழங்குவதில் புலிகள் நிலையம் முன்மாதிரி

(மட்டுவில்)

பொதுமக்களுக்கு பனை வெல்லம் வழங்குவதில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சாவகச்சேரி பனம்பொருள் விற்பனை நிலையமான 'ரஞ்சித்' விற்பனை நிலையம் பாரிய தொண்டாற்றி வருகிறது.

சாவகச்சேரி நவீனசந்தையில் அமைந்துள்ள ரஞ்சித் பனம்பொருள் விற்பனைநிலையம் தினமும் பி. ப. 2 மணிக்கு பொதுமக்களுக்கு நியாயமான விலையில் பனை வெல்லம் வழங்கிவருகிறது.

பெருந்தொகையானபொதுமக்கள் நீண்ட 'கியூ' வரிசையில் நின்று இப் பனைவெல்லத்தை பெற்றுவருகிருர்கள்.

சீனி தட்டுப்பாடு காரணமாக தென்மராட்சியில் பனங்கட்டிகள் அதிக விலையில் விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (82)

# 90வயதுதந்தையை
## பொல்லால் தாக்கிய மகன்

(பண்டத்தரிப்பு)

தமக்கு பணம் தரவில்லை என்று ஆத்திரப்பட்ட மகன் ஒருவர் தமது 90 வயதுடைய தந்தையைபொல்லால்அடித்து படுகாயப்படுத்திய சம்பவம் மாதகல் கிராமத்தில் நிகழ்ந்துள்ளது.

மாதகல் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி ஆண்டி எனற மேற்படி 90 வயது முதியவர் ஓமக்கு ஏற்பட்ட காயத்திற்காக பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ருர்.

இச்சம்பவம்பற்றி [illegible] புலிகளிடமும் அவர் முறைப்பாடு செய்துள்ளார். (72)

## இராசி பலன்

24-07-90
செவ்வாய்க்கிழமை

துதியை காலை 6.55 வரை; மகம் பிற்பகல் 5.19 வரை; சித்தயோகம்; இராகு காலம் 3:02 முதல் 432 வரை;
நல்ல நேரம் 10.52 முதல் 12.02 வரை

மேடம்: தாமதம் பொருள் செலவு, தொழில் குறைபாடு, சோம்பல் மிகுதி.

இடபம்: நோயுண்டு, மனவேதனை, குடும்ப வேற்றுமை, தொழில் செய்யுமிடத்தில் பிணக்கு.

மிதுனம்: காரியபலிதம், சுபகாரியம், குடும்ப மகிழ்ச்சி, விருந்துபசாரம்.

கடகம்: தாய்வழி நினைவு, கடன்சுமை, அலைச்சல், வீண் பயணம்.

சிங்கம்: தொழில் முயற்சி, காரிய வெற்றி பழைய பகை நீங்கும், ஆலயதரிசனம்.

கன்னி: குளம்பிய நிலை, சகோதர விரோதம் தொழில் போட்டி, மனச்சுமை.

துலாம்: காரிய வெற்றி, தொழில் அனுகூலம் குடும்ப உறவு, பெரியோர் ஆசி.

விருச்சிகம்: மனப்போராட்டம், சென்ற இடத்தில் தகராறு, பயணக்களை செலவு.

தனுசு: அதிகாரிகள் குறை, வீண்வாதம், கடன்படல், எதிரிகள் நேசம்.

மகரம்: சிறுவிபத்து அந்நியர் உதவி, குடும்பபாரம், தொழில் கஷ்டம்.

கும்பம்: எண்ணியது கைகூடும், பணவரவு சகோதரர் உதவி, குடும்ப மகிழ்ச்சி

மீனம்: பாராட்டு, பயணங்களால் அனுகூலம் தாய்வழி உதவி, மகான்கள் பேறு.

— ஜோ[illegible]

## மௌன விரதமிருந்து புலியில் சேர்ந்த சிறுவன்!

[யாழ்ப்பாணம்]

பதினான்கு வயது சிறுவன் ஒருவன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேருவதற்காக, வீட்டில் இரண்டு தினங்கள் மௌனவிரதம் மேற்கொண்டான். இதனால் பெற்ரோர் அவரை புலிகளிடம் ஒப்படைத்தனர்.

யாழ்ப்பாணம் அத்தியடி புதிய வீதியைச் சேர்ந்த இரத்தினம் என்ற சிறுவன் வீட்டில் 2 தினங்கள் எவருடனும் பேசாமல் மௌனமாக இருந்தார். வளர்ப்புத் தந்தையான திரு. சி. யோகராசா, எதற்காக மௌனம் இருப்பதாக கேட்டபோது புலிகள் இயக்கத்தில் சேரப்போவதாக சிறுவன் சொன்னான்,

தந்தை அவரை உடனடியாக கூட்டிச்சென்று புலிகள் முகாமில் ஒப்படைத்தார். கண்டியைச் சேர்ந்த இச்சிறுவன் கடந்த மூன்றுவருடமாக திரு யோகராசா அன்போடு வளர்த்து வந்தது குறிப்பிடத்தக்கது.

## "போராளிகள் வெற்றிபெற
# உண்ணாவிரதம்
## அனுஷ்டிக்க வேண்டும்"

(மானிப்பாய்)

"சிங்கள இராணுவம் வெற்றிபெற வேண்டுமென்று சிங்கள இனம் ஒன்றுபட்டு சத்தியாக்கிரகத்தையும் உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டுவருகின்றார்கள். எமது போராளிகள் வெற்றி பெறவேண்டுமென்று நாம் உண்ணாவிரதமோ சத்தியாக்கிரகம்மா ஏன் இருக்கக் கூடாது"

இவ்வாறு நவாலி சற்கேணியடி கந்தரடைப்பு வயிரவர் ஆலய முன்றலில் போராளிகள் வெற்றிபெறவேண்டி நடாத்தப்பட்ட உண்ணாவிரதத்தினை முடித்துவைத்து உரையாற்றிய நவாலி சிற்றூரவை உறுப்பினர் திரு. வே. சிற்றம்பலம் கூறினார்.

நவாலி சிற்றூரவை தலைவர் திரு. சிவகுமாரன் தலைமையில் இவ் உண்ணாவிரதம் இடம்பெற்றது.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "வடக்கு கிழக்கு பகுதியில் தற்போது நடைபெற்றுவரும் யுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானதல்ல. முழுத் தமிழினத்தையும் அழித்தொழிப்பதற்காக நடைபெறும் யுத்தம்."

"இப் போராட்டத்தில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் வந்து பங்குபற்றி எமது தாயக மண்ணை மீண்டெடுப்பதற்கு முன்வாருங்கள்" என்ருர். (71)

## இவர்கள் 'துரோகிகள்'

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் தோற்றுபவர்களும், வெளி மாவட்டங்களுக்குச் சென்று தோற்றுபவர்களும் 'துரோகிகள்' என யாழ் மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமான சுவரொட்டிகள் பெரிய அளவில் நகரின் பல பாகங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன. (ச)

## ஹெலி தாக்குதல் சிறுவன் பலி!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முருகண்டிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஹெலித்தாக்குதலுக்கு எருசலம் நகரில் வசித்து வந்த முத்துக்கறுப்பன் நாகராசா (வயது 14) என்ற சிறுவன் பலியானர். (83)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி




| எஸ். சரவணமுத்து | எஸ். கலாபரமேஸ்வரன் |
|---|---|
| தோற்றம்: 19-04-1901 | தோற்றம்; 02-08-1944 |
| மறைவு: 24-07-1983 | மறைவு: 24-07-1983 |

திதி: 06-08-1990

தங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

| | |
|---|---|
| மனைவி, மக்கள், | மனைவி, மக்கள், |
| மருமக்கள், | தந்தை, சகோதரர்கள், |
| பேரப்பிள்ளைகள். | மைத்துனர், மைத்துனியர். |

'இலக்குமி பதி'
பலாலி வீதி, திருநெல்வேலி. (சி-4104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகளின் ஆற்றல்; உலகபத்திரிகைகள்புகழாரம்!

**மாவீரர்**

மரபு வழிக்கதைகளில்வரும் வியப்பூட்டும் மாவீரர் களைப் போல் பிரபாகரன் இருக்கிருர் என்று உலகிலேயே கூடுதலாக விற்பனையைக்கொண்டிருக்கும் ஆங்கில வாரஇதழ் Time (9-4-90) கூறியிருக்கிறது.

தகவல்:
-நெருப்பு (ஜூன் 1990)

**ஸ்டேஸ்மன் கருத்து**

இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகளை ஒரு குறுகிய காலத்திற்குள் நிராயுத பாணிகளாக்கியிருப்பின் வடக்கு கிழக்கில் இன்று ஏற்பட்டிருக்கும் கொழும்பு அரசாங்கத்தின் ஸ்திரமான ஆட்சி வடக்கு கிழக்கில் இதுவரை நிலைநாட்டப்பட்டிருப்பின் இன்று தமிழீழ போராட்டம் தோல்வியில் முடிவடைந்த போராட்டங்களில் ஒன்ருகவே இருந்திருக்கும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தியாவை அதனுடைய நடவடிக்கைகளில் வெற்றியோ தோல்வியோ காணமுடியாத நிலைக்கு தள்ளிவிட்டனர். இது தவிர இராஜ தந்திரத்தில் அவர்கள் சளைத்தவர்கள் அல்ல என்பதையும் நிருபித்து விட்டனர்,

-சனந்தா கேட்டாறே
ஆசிரியர் ஸ்டேஸ்மன்
டில்லி,

**புயலின் மையம்**

பிரபாகரன் புயலின் மையமாக இருக்கிருர். 1980-க்கும் 1990க்கும் இடைப்பட்ட பத்தாண்டு காலத்தைத் திரும்பிப் பார்க்கிறேம். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு: வேலுப்பிள்ளை பிரபாகரன் 'உலகின் வலிமைமிக்க ஒரு கெரில்லாப் போராட்ட இயக்கத்தின் தலைவர்' என மேலைநாட்டு நிபுணர்களாலும், போர் முறையில் ஒரு பெரும் மேதை என்று இராணுவ ஆய்வாளர்களாலும் கருதப்படுகின்ருர்.

இந்தியாவின் படைகள் அனைத்துக்கும் தளபதியாக இருக்க பிரபாகரன் மிகப் பொருத்தமானவர் என்று இன்று ஆட்சிப்பீடத்தில் உயர் தலைமைப்பீடத்திலுள்ளவர் (ஜனதிபதி பிரேமதாசா) கூறியதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிரபாகரனை நாங்கள் கடந்த பத்து ஆண்டுகளில் புகழ்மிக்க மனிதன் ஆக (Man of the Decade) தெரிவு செய்கிறேம். இது வெறும் கணிப்பல்ல-வரலாற்று அடிப்படையில் நாங்கள் எடுக்கும் முடிவாகும்.

'இந்து' ஏட்டின் ஆசிரியர் 'ராம்' கூறியது என் நினைவுக்கு வருகிறது, பிரபாகரனின் படம் தமிழ்நாட்டின் கிராமப்புறத்திலுள்ள வீடுகளில் எல்லாம் இன்று தொங்குகிறது. என்று அவர் முன்பு ஒருமுறை என்னிடம் சொன்ஞர். ஆனல் பிரபாகரனின் புகழ் உச்சநிலையை அடைந்ததற்கு காரணம்-உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை அவர் எதிர்த்துமோதியது தான்.

இந்திய பாதுகாப்புக் கல்லூரிகளில் பிரபாகரனின் போர் மிக விரைவில் ஒரு பாடப்புத்தகமாக இருக்கும்.

-லங்கா கார்டியன்
(1-1-90) என்ற ஆங்கில இதழில் மேர்வின் டி சில்வா எழுதிய கட்டுரை.

**குறிப்பிட்ட நோக்கத்திற்கு**

மரணத்தைத் துச்சமாக மதிக்கும் 'சயனைட்டைக்' கழுத்தில் கட்டிக்கொண்டே விடுதலைப் புலிகளின் போர் என் ஆன்மாவைச் சிலிர்க்கச் செய்கிறது. மரணத்தைவெல்கிறவன் எந்த எதிரியையும் வெல்வான், விதி ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகப் பிரபாகரனை அனுப்பி வைத்திருக்கிறது.

இந்தியாவின் இந்து சமயப் பெருந் தலைவர் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சிறி ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் விடுதலைப் புலிகளை இவ்வாறு பாராட்டியுள்ளார்.

-ரி; வி; ஐ (லண்டன்-
ஏப்ரல்-88

-தகவல் நெருப்பு- 10.11.89


**தகர்த்து எறிந்து**

புலிகளை அடக்குவதற்கு இந்தியா கணித்த காலஎல்லை வரையறைகளையெல்லாம் விடுதலைப் புலிகள் தகர்த்தெறிந்திருக்கிருர்கள்.

-த ஐலண்ட்
(ஆசிரியர் தலையங்கம்)
(13-3.89)

**புலிகள் உளவுத்துறை**

எல்லாம் சரியாகத் திட்டமிட்டு இந்தியப் படை ஒரு தாக்குவலுக்கு ஏற்பாடுசெய்த



பின்பு விடுதலைப் புலிகளின் கெட்டித்தனமான உளவுத்துறை அதை எப்படியோ அறிந்து விடுகிறது. அந்தச் சேதி உள்ளூர் எல். ரி. ரி. ஈ. தளபதிக்குப் போய் சேர்ந்துள்ளது. இந்தியப் படையின் போர்த்தந்திரக் குறைவும், அணுகுமுறைத் தவறுமே இன்றுள்ள தோல்விக்குக் காரணமாகும்.

-இண்டியா வீக்
-28 ஏப்ரல் 4 மே-89

**ராணுவ தோல்வி**

வவனியா காடுகளில் அண்மையில் நடந்த பல சண்டைகளும் ஏனைய நகர்ப்புறங்களில் விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட மரண கிடங்குகளின் விளைவுகளுமே அமெரிக்க படைகளுக்கு வியட்நாம் ஏற்படுத்திய அச்சத்தைவிடக் கூடிய அச்சத்தையே இந்திய அமைதி படைக்கு விளைவித்துள்ளது. எல். ரி. ரி..ஈ கெரிலாக்களால்

தொகுப்பு:
**கா. யோகநாதன்**

இந்திய படைவீரர்கள் கொல்லப்படுவதாகவரும் சேதிகளும் இராணுவ மருத்துவ நிலையங்களுக்கு காயமடைந்த இந்தியப்படை வீரர்கள் அடிக்கடி கொண்டு வரப்படுவதும் அரசுக்கு இக்களத்தில் ஏற்பட்டுள்ள வெற்றியை அல்ல— இராணுவ தோல்வியையே காட்டுகிறது.

சண்டே (SUNDAY)
14, 2, மே. 89

**அமைதியாகதிரும்பினர்**

இந்திய அமைதிப்படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஏ. எல். கல்கட் முல்லைத்தீவு நித்திகைக்குளம் காட்டுப்பகுதியில் ஹெலிக்கொப்டரில் இறங்கிஞர் அந்த இடத்தில் இந்தியப் படைக்காவலையும் மீறி விடுதலைப்புலிகள் தரையில் இருந்த இரு ஹெலிக்கொப்டர்களை சுட்டுநொறுக்கிஞர்கள் ஒன்று கல்கட் உடையது. பதுங்கு குழியில் ஓடி ஒளித்து கல்கட் உயிர்தப்பிஞர் புலிகள் தங்கள் வேலையை முடித்து விட்டு எந்த உயிரிழப்புமின்றி அமைதியாக திரும்பிஞர்கள்.

இன்டியா வீக்
(INDIAWEEK)
மே 26, ஜுன் 1 - 89

**விடுதலைப் புலிகளின்முடிவு**

விடுதலைப் புலிகள், ஒரு மனிதன் நகரக்கூடாது என்று முடிவுசெய்தால் அவன் நகராமல் நின்றுவிடுகிறுன். இதனை இந்தியப் படைத் தளபதி 'காலோனல்' தடுத்துவிடமுடியவில்லை.

-சன்டே ஜுலை 17-23-1989

ஒவ்வொருவரும் வெளியே புறப்படும்போது விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகளை சந்தித்துவிடக்கூடாது என்று கடவுளை வணங்கிவிட்டேஇந்தியப்படைஆட்கள் புறப்படுகின்ருர்கள்: இந்திய அமைதிப்படையை இறைவன் காப்பாற்றுவாஞக.

-இந்தியா வீக்-மே 26-1989

உலகில் இன்றுள்ளகெரில்லா விடுதலைப்போராட்டத் தலைவர்களில் முதலாவது இடம் பிரபாகரனுக்குத்தான்.

-பி-பி.ஸி. லண்டன் 1988

**தமிழீழத்தின் நேதாஜி**

பிரபாகரன் தமிழீழத்தின் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் ஆவர். அவர் ஒரு சகாப்தத்தின் தலைவர் (வெரித்தாஸ் வாஞெலி-1989):

---

## கடுகுக் கதைகள் 1

# எரியும் வீட்டில்...

'குருடன் பெண்டிலுக்கு அடிப்பது போல' என்கிருர்களே? கேள்விப்பட்டிருப்பீர்கள்.

எங்கள் மாண்புமிகு அரசில் ஆகாயப்படை வீரர்கள் இப்படியான அடிகளுக்குப் பெயர் பெற்றவர்கள், என்பது பகிரங்க இரகசியம்!

அன்றும் அப்படித்தான் நடந்தது.

கோட்டையைச் சுற்றிக் குண்டு வீசுவதாக பெயர் பண்ணிக் கொண்டு யாழ்ப்பாணப் பெரிய கடைக்கட்டடங்களைத் துகள் பறக்க வைக்கும் வீரசாதனைகள் நிகழ்ந்து கொண்டிருந்த வேளை.

கடைக்கட்டடங்கள் வரிசையாக மடித்து வைக்கப்பட்ட கடதாசிக்கூட்டம் ஒன்றென்ருகச் சரிந்து விழுவது போலத் தரைசாய்கின்றன.

தீப்பற்றி எரிகின்றன. பொருள்கள் நாசமாகிக் கொண்டிருக்கின்றன.

எங்கள் மறத்தமிழ்ப் பரம்பரையில் ஒரு சிலருக்கு இது பொறுக்கவில்லை. எரிந்தும் இடிந்தும் விழும் கட்டிடங்களிலேயே புகுந்து கிடைத்தவற்றை எடுத்துச்செல்லும் முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

இதற்கு நாகரிகமான மொழியிலே 'சூறையாடுதல்' என்பது பெயர்.

இந்தப் பெருமக்கள் கூட்டத்தில் ஒருவன்தான் நாதன்.

சூறையாடும் திருக்கூட்டத்தின் நாதஞக விளங்க எவ்வகையிலும் தகுதியுடையவன் தான்!

அவனுடைய உரப்பை நிறைகின்றது. நவநாகரிக நங்கையரின் வனப்புடல்களை அலங்கரிக்கத்தக்க அழகிய சேலைகள், காலணிகள், கைக்கடிகாரங்கள் இன்னேரன்ன பலப்பல!

அவன் கொண்டுவந்த உரப்பை நிறைந்ததுபோல அவன் மனமும் கனவுகளால் நிறைகிறது!

'தன் மனைவியின் மெல்லுடலில் நழுவி நழுவி விழப்போகின்ற பட்டுச் சேலைகள் அவளின் அழகுக் கரத்தை அணி செய்யப்போகின்றது 'சீக்கோ' கைக்கடிகாரம்.' இவை மட்டுமா?

'மக்களின் உடல்கள், கால்களையெல்லாம் வனப்புடையன ஆக்கவென்றே கைக்கெட்டியுள்ள சட்டைகள், பாத அணிகள்!'

'இவற்ருேடு...

'இனி பற்றிக் சாறத்திற்கும், பகாமா சேட்டுக்கும் மனமுறவேண்டிய தேவையும் நாதனுக்கு இல்லை...'

'திரும்பவும் வருவோம்' என்ற திடநம்பிக்கையோடு தூக்கமுடியாத சுமையாகி விட்ட உரப்பையை முதுகிற் போட்டபடி நாதன் தன் குடிசை வீட்டிற்கு நாடக நாயகஞக வருகின்ருன்.

அங்கே...... குடிசை இருந்த இடத்திலே......சாம்பர்மேடு... அதனிடையே காலிழந்தும், கையிழந்தும், பாதிகருகியும் கிடக்கும் அவன் குடும்பத்தினர்.

''ஐயோ! பாவம்! நாதனுடைய குடும்பத்திற்கு இந்தக் கதி நேர்ந்திருக்கக் கூடாது''

கண்ணீரும் பெருமூச்சுமாக அவனது உற்ருரும், உறவினரும் சூழ்ந்து நின்று அவலிக்க 'நாதன்-? வேர்பாறிய மரமாஞர்.

- சிவராணி -

---

நூற்றுக்கணக்கில்—

# மாணவிகள் புலிகளில் சேருகின்றனர்!

[கிளிநொச்சி]

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பெண்கள் படைப்பிரிவில் நூற்றுக்கணக்கான மாணவிகள் தினமும் சேர்ந்து வருகின்றனர்.

இவர்களில் கூடுதலாக உயர்வகுப்பு மாணவிகளே பெரும் எண்ணிக்கையில் சேர்ந்து மண்மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதையிட்டு இப்பகுதிப் பெற்ருேர் பெருமிதமடைந்து வருகின்றனர்.

இதேவேளை இங்கு பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்களும் மற்றும் உயர்வகுப்பு மாணவர்களும் விடுதலைப் புலிகள் படைப்பிரிவில் இணைந்துள்ளனர்.

(83)

---

# "இளைஞர் யுவதிகள் தமிழீழ மண்மீட்பில் ஈடுபட தயக்கம் காட்டக்கூடாது"

(கிளிநொச்சி)

''தமிழ் இளைஞர் யுவதிகள் தமிழீழ மண்மீட்பில் தம்மை ஈடுபடுத்த தயக்கம் காட்டக்கூடாது. தமிழீழப் பற்றும் தன்மான உணர்வும் இருக்குமாயின் அகதிநிலை என்ற நிலை நம்மவர்களுக்கு ஏற்படாது.''

இவ்வாறு முறிகண்டியில் நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கில் உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பாரதிபுரம் பகுதி பிரதேசப் பொறுப்பாளர் திரு. பி. பிரசாத் குறிப்பிட்டார்:

பிரதேசப் பொறுப்பாளர் திரு. பிரசாத் மேலும் பேசுகையில்:-

ஸ்ரீலங்கா இனவாத அரசு தமது வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் எமது போராட்டத்தை நலிவடைய செய்ய முயற்சிக்கிறது. இதனை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். போர்க்கால நடவடிக்கைகளில் அனைவரும் பங்கேற்க முன்வரவேண்டும் என்ருர். (83)

---

## விமானத் தாக்குதல்:

# கிளிநொச்சியில் அத்தியாவசிய சேவைகள் முற்ருக ஸ்தம்பிதம்

(நமது நிருபர் கே. வி. கே. திருலோகமூர்த்தி)

கிளிநொச்சியில் விமானத் தாக்குதல் உக்கிரமடைந்து வருவதனுல் பல்வேறு இடங்களில் செயல்பட்டுவரும் அரச அலுவலகங்களில் அத்தியாவசிய சேவைகள் ஸ்தம்பிதமடைந்து வருகின்றன.

கிளிநொச்சிநகரில்கச்சேரி பிரதேச சபை. மாவட்ட வைத்தியசாலை, விவசாய அலுவலகங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கல்வித் திணைக்களம் உட்படச் சகல அலுவலகங்களும் இராணுவத் தாக்குதல் காரணமாகப் பெரிதும் பாதிம்படைந்து பரந்தன் முதலான இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் மாவட்ட வைத்தியசாலை, கச்சேரி ஆகியவை விமானக்குண்டு வீச்சால் பெரும் சேதத்தைத் தழுவியுள்ளன.

தற்போது தினமும் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் விமானக் குண்டுவீச்சால் அத்தியாவசியச் சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்து வருகின்றன. விமானத் தாக்குதலால் நகரப்பகுதியில் கடைகள், வீடுகள், அலுவலகங்கள் இடிந்து சேதமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (83)

---

# 100 வித வாழைகள்

புராதன இந்து சீன கிரேக்க ருேமனிய இலக்கியங்களில் வாழை குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஆதிகாலத்திலிருந்தே இந்தியாவில் வாழை பயிரிடப்படுகின்றது. அங்கிருந்து அரேபியர்கள் மேற்கு ஆசியா எகிப்து முதலிய நாடுகளுக்கு எடுத்துச் சென்ருர்கள். போர்த்துக்கேயர்கள் இதை கறிச் தீவுகளுக்கு எடுத்துச் சென்றனர். பின் அட்லான்றிக் சமுத்திரத்திற்கப்பாலும் காலாந்தரத்தில் எடுத்துச் செல்லப்பட்டது, பின் கிறிஸ்தவ மிசன் ஸ்தாபித்த இடமெலாம்சாப்பாட்டிற்காக வாழை உற்பத்யைப் பெருக்கிஞர்கள்.

வாழையில் 100 இனங்கள் ஏறத்தாழ உண்டு. உஷ்ணவலயப்பிரதேசங்கள், தீவுகளில் இவை நன்ருக உற்பத்தியாகின்றது. மத்திய தென் அமெரிக்கா மேற்கு இந்தியத்தீவுவுகள் இவற்றை ஏராளமாக ஏற்றுமதி செய்கின்றது. வாழை அறை உஷ்ணத்திலே பழுக்கவைப்பதே சிறந்தது. வாழைப்பழம் நன்கு கனிந்ததும் அதிலுள்ள கார்போஹைறேட் முற்றும் பழச்சீனியாகின்றது. இதில் ஒரு பகுதி உடலில் உடன் உறிஞ்சப்பெற்று சக்தியளிக்கின்றது, மீதி சிறுகாலம் வரை செறிந்து சக்தியைக் கொடுக்க வல்லது. இலேசாகச் சேமிக்கக்கூடியது, பொதுவாக வாழைப்பழத்தில் பொட்டாசியம் தவிர்ந்த ஏனைய போசாத்துக்கள் இதிலுள்ளது.

வாழைப்பழம் இலகுவாகச் சீரணிப்பதாலும் நல்ல சக்தியைக் கொடுப்பதாலும் இதை பிரதானமாகக் குழந்தைகளும் முதியோரும் உணவிற் சேர்த்துக்கொள்வது நலம். வீட்டுக்கொரு வாழை நடுவோமாக

தொகுப்பு:
- க. கனகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்வைப் பகுதியில்
# பீரங்கித் தாக்குதல்
## புலிகளால் முறியடிப்பு!

(வடமராட்சி)

வல்வைக கடற்பிராந்தியத்தில் தரித்து நிற்கும் கடற்படையினர் கரையேவந்து நடத்திய தாக்குதல் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது.

கடந்த 21ம் திகதி இரவு 8-30மணி முதல் நள்ளிரவு 12-30 வரை இத்தாக்குதல் நீடித்தது.

மேற்படி கடற்படையினர் கடும் இரவானதால் திடீரென கரையயண்டிய பகுதிக்கு அமைவாக வந்து தொண்டைமானுறு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறைபோன்ற பகுதிகளில் பாரிய தாக்குதல் நடத்தினர்.

எனினும் பலமணி நேரமாக வல்வைப் பகுதியையே தாக்கத்தொடங்கினர். இவர்களின் பாரிய தாக்குதலை புலிகள் நேரில் எதிர்கொண்டு தாக்கத்தொடங்கினர். புலிகளின் பாரிய கடும் தாக்குதலை தாக்குப்பிடிக்காமல் கடற்படையினர் மேல்கடல் பகுதிக்கு சென்று மக்கள் குடியிருப்பு நோக்கி ஆட்லறிஷெல் பீரங்கி போன்றவற்றால் தாக்கத் தொடங்கினர்.

இத்தாக்குதல்களால் தொண்டைமனாறு அண்மித்த பெரும்பகுதியின் பெரிய கடற்கரையில் உள்ள பலரின் மீன்பிடி படகுகள் வீடுகள் சேதமானது.

ஏறகனவ இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து தொண்டைமனாறு வீரமாகாளி அம்மன் ஆலயத்திலும் ஏனைய இடங்களிலும் மாறிக்கொண்டதால் உயிர் இழப்பு அங்கு தவிர்க்கப்பட்டது.

மேலும் இவ்இரவு வேளையில் பலாலி இராணுவமுகாமில் இருந்து ஷெல்களும் ஹெலிகாப்டர்களிலிருந்து வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இத்தாக்குதல்களால் பலர் இடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர். (51)

## உரம், கிருமிநாசினி
# கிளிநொச்சியில் தட்டுப்பாடு; விவசாயிகள் பாதிப்பு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகவேளாண்மைக்கான உரம், கிருமிநாசினி முதலானவற்றின் தட்டுப்பாட்டில் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

அரசாங்க அதிபர் கே. மாணிக்கவாசகர் நீர்ப்பாசன பொறியியலாளர் எஸ். நவரத்தினராசா ஆகியோர் எடுத்த சில மாற்று நடவடிக்கை மூலம் குளம் திறக்கப்பட்டு தற்போது வயல்களுக்கு தண்ணீர் விடப்பட்டு வருகிறது.

இதேவேளை தென் இலங்கையில் இருந்து உரம், கிருமிநாசினி வகைகள் கொண்டுவரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் இவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

கையிருப்பில் இருக்கும் சொற்பதொகை யூறியா உரமும் அந்தர் 900 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

## வடமராட்சியில்
# விமானங்கள் நடமாட்டம்!

(வடமராட்சி)

வடமராட்சிப்பகுதியில் பொம்மர், அவ்ரோ, ஹெலிகள் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நண்பகல் முதல் நள்ளிரவு 12.00 வரை வடமராட்சியைச் சுற்றி சுற்றி வட்டமடித்ததுடன், ஏழு ஹெலிக் கொப்டர்கள் வல்லை வெளிப்பகுதியில் இரவு 12.30 மணியளவில் கூட தாக்குதல் நடத்திய வண்ணம் இருந்தன. (51)

## வடமராட்சியிலும்
# சுவரொட்டிகள்

(வடமராட்சி)

தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் உயர் வகுப்பு ஜீ. சீ. ஈ. பரீட்சையை நிராகரித்து வருகின்றார்கள் அதற்கமைய சுவரொட்டிகளை வடமராட்சியில் எங்கும் ஒட்டியுள்ளார்கள்.

இங்கு பரீட்சை எடுப்பவர்களும் இங்கிருந்து சென்று பிற மாவட்டங்களில் பரீட்சை எடுக்க எத்தனிப்பவர்கள் துரோகிகள் என்று சுவரொட்டிகளில் காணப்படுகின்றன. (51)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஜுலை மாதம் 24ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

## சிறுவன் பலி!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல்தாக்குதலிற்கு கிளிநொச்சி குளக்கட்டிற்கு அண்மையில் பெற்றோருடன் தங்கியிருந்த சிறுவன் ஒருவன் பலியானார்.

நீர்ப்பாசன வேலையில் பலர் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இந்த ஷெல் பிரயோகம் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டது. (83)

## சட்டநாதர் கொடிச்சீலை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடிச் சீலை, இம் மாதம் இருபத்தாறும் திகதி காலை சட்டநாதர் கோவிலடியிலிருந்து ஊர்வலமாக கோயிலுக்கு எடுத்துச் செல்லப்படும். செங்குந்தா மரபு வழித்தோன்றல்களால் வழங்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது. (ச)

## அகதிகளுக்கு உதவும் கல்விநிலையம்

(நாவற்குழி)

தென்மராட்சி கச்சாய் வீதியில் உள்ள புனித லிகோரியர் ஆலய பங்குத் தந்தையின் பராமரிப்பில் இருக்கும் மூன்று அகதிகள் முகாம்களுக்கும் உணவு உடை சேகரிக்கும் பொறுப்பு ஸ்ரான்போட் கல்வி நிலையத்திற்கு அகதிகள் புனர்வாழ்வு கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இக்கல்வி நிலைய மாணவர்களுக்கு பொதுமக்கள் உதவிகளை வழங்கபின்நிற்க வேண்டாமெனக் கோரப்பட்டுள்ளனர். இவர்கள் ஏற்கனவே பல பொருட்களைச் சேகரித்து அகதிகள் முகாம்களுக்கு வழங்கியது குறிப்பிடத்தக்கதாகும். (107)

## புதிய இந்தியத் தூதர்

(கொழும்பு)

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக திரு. நாகேந்திரநாத் ஜா, நேற்றுமுன்தினம் தனது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார். [அ]

## தகவல் தாருங்கள்

மூதூர் அரசினர் வைத்தியசாலையில் கடமை ஆற்றிவரும் அனலை தீவைச் சேர்ந்த டாக்டர் க. செல்லத்துரையின் குடும்பத்தினரை கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியரும், 271/6, நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தியில் வசிப்பவருமாகிய திரு. இ. மா. சிவசுப்பிரமணியம் தேடுகின்றார்.

(யாழ். முத்திரைச் சந்தையில் உள்ள யாழ். இந்துக் கல்லூரி சென். ஜோன் முதலுதவிப் படையின் அகதிகளுக்கான தகவல் மையத்தில் எடுக்கப்பட்ட தகவல் இவை.)

மட்டக்களப்பு 16/1, பெயிலி ரோட்சைச் சேர்ந்த சோமசுந்தரம் சுகந்தனை, அரியாலை 8, கனகரத்தினம் வீதியைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் தேடுகிறார்.

உப்புவெளி 3ம் கட்டை செல்வநாயக புரத்தைச் சேர்ந்த திரு. வி. சிவசிதம்பரத்தை, யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தி 3, செம்மணி ரோட்டைச் சேர்ந்த திருமதி தா. நாகேஸ்வரி தேடுகிறார்.

திருகோணமலை 440, திருஞானசம்பந்தர் வீதியைச் சேர்ந்த திரு. மு. நாகராஜாவை, நல்லூர் 3, செம்மணி வீதியைச் சேர்ந்த திரு. தா. புவனேந்திரன் தேடுகிறார்.

### படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலை நடாத்திவருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் சுற்றிவளைப்புத் தாக்குதலில் நிலைகுலைந்த நிலையில் இருக்கும் இராணுவத்தினர், அருகாமையிலுள்ள பொதுமக்களின் நான்கு வீடுகளை தீயிட்டுக் கொழுத்தியதாகவும் தள்ளாடி, முருங்கன் பகுதிகளில் கடும்மோதல்கள் நடைபெற்று வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

## பலாலியில்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகளின் 2-வது லெப்டினன்ட் தேவன் (சின்னத்தம்பி ஈசன்) மரணமானார்.

மேற்படி சம்பவம் நேற்று முன்தினம் காலை 8-30 மணியளவில் நடைபெற்றது.

மரணமான லெப்டினன்ட் தேவனுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர அஞ்சலியைச் செலுத்துகிறார்கள்.

## இருவர் பலி

(யாழ்ப்பாணம்)

மட்டுநகர் தெக்கிளாச் சோலைப் பகுதியில் நேற்று முன்தினம், பகல் 12மணிக்கு, ஹெலிக்கொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டதாகத் தெரியவருகின்றது.

## இராணுவ முகாம் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா காமினி இராணுவ முகாம் மீது நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டதில் இராணுவத்தினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (வி)

# இப்படியும் நடக்கிறது

சந்தர்ப்பங்கள் சில வேளைகளில் என்ன எல்லாம் செய்யும் என்பது நீங்களும் அறிந்ததே. நான் சொல்லப்போகும் சம்பவம் ஆனையிறவு-குறிஞ்சாத்தீவுப் பகுதியில் நடந்துள்ளது.

ஆனையிறவு-குறிஞ்சாத்தீவுப்பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும், தரையிறங்கிய இராணுவத்தினருக்குமிடையே கடும் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த ஆரம்பக் கட்டம் அது.

உருத்திரபுரம் எட்டாம் வாய்க்கால்பகுதியில் இராணுவ சீருடைகள்போன்று உடையணிந்த ஆயுதபாணிகளான சிலர் நள்ளிரவுவேளை வீடுகளில் புகுந்து. ''நாங்கள் ஸ்ரீலங்கா இராணுவம்'' என்று சிங்களத்தில் கூறி கொள்ளையிட முயன்றபோது' கிராமவாசிகள் துணிந்து நின்று போராடி, தமது உடமைகளைக் காப்பாற்றியுள்ளனர்!

கத்தி, வாள், மற்றும் ஆயுதங்களுடன் வந்த மேற்படி நபர்கள் சில கிராமவாசிகளை கத்தியால் வெட்டிக் காயப்படுத்திவிட்டு தப்பிவிட்டனர்!

தப்பி ஓடிய சிலரை விடுதலைப்புலிப் போராளிகள் கைது செய்துள்ளதாக இப்பொழுது தெரியவந்துள்ளது.

காதோடு காதாக; மேற்படி நபர்கள் சாட்சாத் கொள்ளையர்கள்தானும். சந்தர்ப்பத்தை பயன்படுத்தப்போய், நன்றாக வாங்கிக்கட்டிக் கொண்டார்கள்! (தகவல்: நமது கிளிநொச்சி செய்தியாளர்)

★ ★ ★

வர்த்தகர்கள் இருக்கிறார்களே; அவர்களில் ஒவ்வொருவரும் தனிரகம். சிலர் நல்லவர்கள் சிலர் மிக நல்லவர்கள், வேறு சிலர் வல்லவர்கள். இவர்களிலும் சிலர் மிக வல்லவர்கள் - கெட்டிக்காரர்கள்.

வல்வெட்டித்துறையில் வேம்படி எனும் இடமிருக்கிறது. இந்த வேம்படியைச் சேர்ந்த 'இராமுகடை'யில் தானமும் நிதானமும் கொடிகட்டிப் பறக்கிறது!

ஊர் நிலைமையில், சீனி விலை யானை விலையாகிவிட்டது. மாவு என்பது குதிரைக் கொம்பு! இப்படி இருந்தும், மேற்படி வல்வை வர்த்தகர், கையிருப்பிலுள்ள மாவையும் சீனியையும் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்து வருகிறார் என்றால் நிச்சயம் சபாஷ்போடத்தான் வேண்டும். குடும்ப கார்ட் முறையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் கால் கிலோ சீனி 7 ரூபா 50 சதத்திற்கும் கால் கிலோ கோதுமை மா 3 ரூபா 15 சதமாகவும் இந்த வர்த்தகர் விற்பனைசெய்துவருகின்றார். இதன்மூலம் வல்வையில் மேலும் ஒரு 'நல்முத்திரை' பதிக்கப்படுகிறது. (தகவல்: நமது வடமராட்சி நிருபர்).

'ஊடுருவி'

### ரஞ்சன்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு சென்று மீண்டும் இளவாலை சந்தியை அடைந்தது. அங்கு பெருந்தொகையான மக்கள் முன்னிலையில் கொடும்பாவிதீயிட்டு கொழுத்தப்பட்டது.

### பரந்தன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

''லக்சபான'' மின்சார பாதை வழியாக பரந்தன் முல்லைத்தீவு வீதியிலிருந்து 3ம் வாய்க்கால் ஊடாக கிளிநொச்சிக்குள் பிரவேசிக்க முற்பட்ட இராணுவத்தினரை, விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கியதில் இராணுவத் தரப்பினருக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் இப்பகுதிகளில் தற்போது கடும் சண்டை நடைபெற்றுவருவதாகவும், இப்பகுதிகளைச் சுற்றி கடுமையான பொம்பர் தாக்குதல்களும் நடைபெற்றுவருவதாகவும் கூறப்படுகின்றது. (வி)

### யாழ். நகரில்

(1-ம் பக்கத் தொடர்சி)

நேரங்களிலும் பொது மக்கள் வாழும்பகுதிகளில்போட்டன. சந்திரசிகிச்சை சாதனங்கள் அனைத்தும் சேதமடைந்துள்ளதினால் பலலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி மருத்துவ மனையை அண்டியுள்ள திருமதி சவரிமுத்து, பிலேவியன், புறொக்டர் அன்ரனி, ஜோன்பிள்ளை ஆகியோரின் வீடுகளும் முற்றாக சேதமடைந்தன.

நேற்றுக்காலை பொம்மர் விமானங்களும், அவ்ரோ விமானங்களும் யாழ் நகர் மீது மீண்டும் தாக்குதல்களை மேற்கொண்டதனால் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கு அருகாமையிலுள்ள பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. (வி)

## சிற்றூரவைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு சிற்றூர் அவைக் கூட்டம் சமீபத்தில் மானிப்பாயில்நடைபெற்றது.

இதில் ஆனைக்கோட்டை, மானிப்பாய், சுதுமலை, சண்டிலிப்பாய், மாகியப்பிட்டிநவாலி சிற்றூர் அவை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சங்கர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

### தகவல் மையம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பல்தீவை சேர்ந்த சில அகதிகள் வந்திருந்தனர். அவர்களை கல்வி காரியாலயத்தில் தங்க வைத்தபின் காலையில் முத்துத்தம்பி வித்தியாலய அகதி முகாமிற்கு அனுப்பி வைத்தனர்.

### யாழ். மக்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கை இந்தியாவுடன் பகைத்துக்கொள்வதினால் எந்த விதமான பலனும் ஏற்படப் போவதில்லை'' என்று கூறினார்,

''தமிழ் அகதிகள் தமிழகத்திற்கு அதிகளவில் வந்து கொண்டிருப்பதால் இந்திய அரசாங்கத்திற்கு பல பிரச்னைகள் தோன்றியுள்ளன. இரு நாட்டு அரசுகளும் அகதிகள் பிரச்சனையை தீர்த்து வைப்பதில் இணைந்து செயற்பட்டு ஒரு திட்டத்தை வகுக்கலாம்'' என்றும் அவர் கூறினார். (து)

### விடுதலைப் புலிகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் எவ்வளவுபேர் கொல்லப்பட்டனர் என்பதை சரியாக கணக்கிட்டுக்கூறமுடியாது என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org